இந்திய சமுதாயத்தின் இதயக்குரல்

# மக்கள் ஓசை

HARIAN TAMIL MAKKAL OSAI SUARA RAKYAT

PP 6926/10/2012 (030956)

## அந்நியத் தொழிலாளர் விண்ணப்பத்தில்

# நீடிக்கும் குளறுபடி

### பிரிமாஸ் வேதனை

கோலாலம்பூர்,பிப்.13-

இந்திய உணவகத் தொழில்துறை எதிர்கொண்டிருக்கும் அந்நியத் தொழிலாளர் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண வேண்டிய அரசாங்கம் அதற்கான விண்ணப்ப நடைமுறைகளில் குழப்பத்தையே விளைவிப்பதாக பிரிமாஸ் எனப்படும் மலேசிய இந்தியர் உணவக உரிமையாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்திய உணவகங்களில் நிலவும் தொழிலாளர் பற்றாக்குறைக்குத் தீர்வு காண ஒரு தொழிலாளிக்கு மாற்றுத் தொழிலாளி வழங்கப்பட வேண்டும் என்ற கோட்டா முறையிலான விண்ணப்பத்தில் தொடர்ந்து குளறுபடிகள் நீடிக்கின்றன.

பக்கம் 13




### முதல் பக்கத் தொடர்ச்சி

## அந்நியத் தொழிலாளர்...

பிரிமாஸ் தொடர்ந்து விடுத்த கோரிக்கையின் பயனாக கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் அந்நியத் தொழிலாளர் கோட்டாமுறை விண்ணப்பத்திற்கு 31 டிசம்பர் 2025 வரை மனு செய்யலாம் என அரசாங்கம் அறிவித்தது. அதற்கான நடைமுறை செயல்வடிவத்தை அக்டோபர் 2025இல் வெளியிட்டது.

அக்காலகட்டத்தில் அந்நியத் தொழிலாளர்களுக்கான விண்ணப்பத்திற்கு உணவக உரிமையாளர்கள் மும்முரம் காட்டி கொண்டிருந்த நிலையில் உள்நாட்டு வாணிபம், வாழ்க்கைச் செலவின அமைச்சு நேர்காணலை ஒத்திவைப்பதாகவும் அதற்கான முகப்பிடங்கள் 26 டிசம்பர் 2025 முதல் 2 ஜனவரி 2026 வரை மூடப்பட்டிருப்பதாகவும் முகப்பிடங்கள் 5 ஜனவரி 2026இல் மீண்டும் செயல்படும் எனவும் உள்துறை அமைச்சு கடந்த 19 டிசம்பர் 2025இல் அறிவித்தது.

இதனிடையே, அந்நியத் தொழிலாளர்களுக்கான கோட்ட நிறைவு பெற்றிருப்பதாகவும் அந்நியத் தொழிலாளர்களை வருவிப்பது முழுமையாக நிறைவு பெறுவதாகவும் 24 டிசம்பர் 2025இல் உள்துறை அமைச்சு கூறியது.

அதோடு 2025க்கான அந்நியத் தொழிலாளர்களுக்கான சிறப்பு விண்ணப்ப கோட்டா விண்ணப்பம் 19 ஜனவரி 2026 முதல் 31 மார்ச் 2026 வரை புதிய அகப்பக்கத்தில் திறக்கப்படுவதாக 24 டிசம்பர் 2025இல் உள்துறை அமைச்சு தெரிவித்தது.

ஆனால் புதிய அகப்பக்கத்தை அணுகும் போதெல்லாம் Full- No Timeslots Available என்று மட்டுமே காட்டப்படுவதால் நேர்முகத்துக்கான காலக்கெடு கிடைக்காமல் பிரிமாஸ் உறுப்பினர்கள் தத்தளிக்கின்றனர். புதிய விண்ணப்பத்திற்கான இறுதி நாள் மார்ச் 31 என்பதால் மாற்று தொழிலாளர்கள் அல்லது புதிய தொழிலாளர்களுக்கான அனுமதி உணவக உரிமையாளர்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

தொழிலாளர் பற்றாக்குறையால் இந்திய உணவகத்துறை தள்ளாடும் இச்சூழலில் விண்ணப்பத்திற்கு தொடரும் காலதாமதம் இன்னும் நிலைமையை மோசமடையச் செய்யலாம்.

இவ்விவகாரத்தில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு விண்ணப்பங்களில் தொடரும் குளறுபடியை நிவர்த்தி செய்து இந்திய உணவக உரிமையாளர்கள் எதிர்நோக்கும் தொழிலாளர் பற்றாக்குறை பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அச்சங்கம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.